டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 27.08.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 058 - Madurai | Online Edition

# மீன்வளத் துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இந்தியா - செஷெல்ஸ் முடிவு

புது தில்லி, ஆக.26

இந்தியா–செஷெல்ஸ் நாடுகள் மீன்வளம், நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் சார்ந்த பொருளாதாரத் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளன. இதற்காக, 25.08.2026 அன்று இந்தியாவின் மீன்வளத் துறை சார்பில் இருதரப்பு உயர் மட்ட கூட்டம் நடைபெற்றது. இந்தியக் குழுவுக்கு மீன்வளத் துறை செயலாளர் டாக்டர் அபிலக்ஷ் லிகி தலைமை தாங்கினார். செஷெல்ஸ் குழுவுக்கு அந்நாட்டின் மீன்வளம், வேளாண்மை மற்றும் நீலப் பொருளாதார அமைச்சர் வாலஸ் காஸ்க்ரோவ் தலைமை வகித்தார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் உணவுப் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த இரு நாடுகளுக்கும் இடையேயான நெருக்கமான ஒத்துழைப்பு முக்கியமானது என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்தியாவின் மீன் உற்பத்தி தற்போது 19.7 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளதாகவும், கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி 8.46 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடல் மீன் வளர்ப்பு, நவீன மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள், டூனா மீன்பிடி மேம்பாடு, மீன் வள மதிப்பீடு, மீன் பதனப்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் கடல் பாதுகாப்பு போன்ற துறைகளில் இணைந்து செயல்பட இரு நாடுகளும் ஆர்வம் தெரிவித்தன. மேலும், மீன்வளத் தரவுகளை நிர்வகித்தல், கண்காணிப்பு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மீன்வளத் துறையில் தனிப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, ஆண்டுதோறும் செயல்திட்டங்களை வகுத்து செயல்பட செஷெல்ஸ் விருப்பம் தெரிவித்துள்ளது. தொழில்நுட்பப் பயிற்சிகள், நிபுணர் பரிமாற்றம் மற்றும் ஆய்வக வசதிகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இரு நாடுகளின் கடல் வள வளர்ச்சியை நீண்டகால அடிப்படையில் மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

# அதிக மதிப்புள்ள பயிர்களுக்கான பாதுகாக்கப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு உள் மாநில அளவிலான கண்டுணர்வு பயணம்



சிவகங்கை, ஆக.26

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் சார்பில் அட்மா – விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் 40 விவசாயிகள் அதிக மதிப்புள்ள பயிர்களுக்கான பாதுகாக்கப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து உள் மாநில அளவிலான விவசாயிகள் பட்டறிவு பயணம் காய்கறி மகத்துவ மையம் – ரெட்டியார்சத்திரத்திற்கு இரண்டு நாட்கள் (24.8.26 – 25.8.26) அழைத்து செல்லப் பட்டனர். அட்மா திட்டத்தின் மூலம் உள்மாநில மற்றும் வெளி மாநில பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா, பயிற்சி பண்ணைப் பள்ளி, செயல் விளக்கங்கள் மூலம் தொழில்நுட்ப செய்திகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நடப்பு ஆண்டிற்கான அதிக மதிப்புள்ள பயிர்களுக்கான பாதுகாக்கப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்ள வேளாண்மை இணை இயக்குனரின் ஒப்புதலுடன் காய்கறி மகத்துவ மையம் ரெட்டியார்சத்திரத்திற்கு அழைத்து செல்லப் பட்டு தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர்கள் சிவபாலன், தமிழ் செல்வன் ஆகியோர் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் காய்கறி பயிர்கள் பாதுகாக்கப்பட்ட சூழலில் எவ்வாறு சாகுபடி செய்யப்படுகின்றது என்ற பயிற்சி அளிக்கப் பட்டது. மேலும் இப்பயிற்சியின் மூலம் அங்கு பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் செய்யப்பட்டுள்ள காய்கறி பயிர்களை விவசாயிகள் பார்வையிட்டு அறிந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்யா செய் திருந்தார். இப்பயிற்சிக்கு விவசாயிகளை திருப்புவனம் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி அழைத்துச் சென்றார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மண் வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

சேலம், ஆக.26

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி வட்டாரம் எர்ணாபுரம் கிராமத்தில் வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் கீழ் மண் வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.



இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் மணிவாசகம் தலைமை வகித்து, மண் மாதிரி எடுக்கும் முறைகள், மன் மாதிரி பரிசோதனை அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான பேரூட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து வழங்குவதன் பயன்கள் குறித்து விளக்கினார். மேலும், இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மண் வளத்தைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

ஓய்வு பெற்ற துணை தோட்டக்கலைத் அலுவலர் முருகேஷ் கலந்து கொண்டு, மண் வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு மண்புழு உரம், தொழு உரம், பசுந்தாள் உரம் மற்றும் மக்கிய உரங்களைப் பயன்படுத்தி மண் வளத்தை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.

இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் மற்றும் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**23. மீன் சூப்**

**தேவையான பொருட்கள்**

மீன் — 200 கிராம்

பூண்டு – தேவையான அளவு

மிளகு – தேவையான அளவு

சீரகம் – தேவையான அளவு

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

மீனை வேக வைத்து எலும்புகளை நீக்கி சூப்பில் கலந்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# மரங்களை நட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ப்பை ஊக்குவித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, ஆக.26

ஈரோடு மாவட்டத்தில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் காந்தி கிராம கிராமிய நிகர்நிலை வேளாண் மாணவிகள் லேகா ஸ்ரீ திர்க்ஷதா, ஆனந்தி, நி ஷ பார்ஜோ, கவி வர்ஷினி, நதியா ஆகியோர் கிராம ஊராட்சி நாற்றங்காலில் இருந்து பெறப்பட்ட பல்வேறு மரக்கன்றுகளை விவசாயி களின் இல்லங்களில் நட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ப்பை ஊக்குவித்தனர். மகிழம், நாவல், மந்தாரை உள்ளிட்ட பயனுள்ள மரக்கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, விவசாயிகளின் வீடுகளைச் சுற்றியுள்ள சரியான இடங்களில் முறையாக நடவு செய்யப்பட்டது.

மரங்களை வளர்ப்பதன் மூலம் வீட்டைச் சுற்றி பசுமையான சூழலை உருவாக்குவதுடன், காற்றின் தரத்தை மேம்படுத்துதல், வெப்பநிலையை கட்டுப்படுத்துதல் மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கு உதவுதல் போன்ற பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என விவசாயிகளுக்கு மாணவர்கள் விளக்கினர். மேலும், நடவு செய்யப்பட்ட மரக்கன்றுகளை தொடர்ந்து பராமரித்து, முறையான நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினர்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளிடம் மரம் வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், ஒவ்வொரு குடும்பமும் தங்களால் இயன்ற அளவு மரக் கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் என்ற எண்ணமும் வலியுறுத்தப்பட்டது.

பசுமையான கிராமங்களை உருவாக்குவதற்கும் நிலையான சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

# அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, ஆக.26

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) சார்பில், அங்கக வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி, பாப்பாங்காட்டூர், கவுந்தப்பாடியில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு முருகேசன், வேளாண்மை அலுவலர், உயிர் உரங்கள் உற்பத்தி மையம், பவானி தலைமை தாங்கினார். அவர் விவசாயிகளுக்கு உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

கணேச மூர்த்தி, விதைச் சான்று அலுவலர், தரமான விதை உற்பத்தி, விதைப் பண்ணை அமைத்தல் மற்றும் அங்ககச் சான்று பெறுவதற்கான நடைமுறைகள் குறித்து விவசாயி களுக்கு விளக்கமளித்தார்.

செல்வகுமார், உதவி பேராசிரியர், குமரகுரு வேளாண்மை கல்லூரி, இயற்கை உரங்கள் தயாரித்தல் மற்றும் இயற்கை பூச்சி விரட்டி தயாரிக்கும் முறைகள் குறித்து செய்முறை விளக்கத்துடன் எடுத்துரைத்தார். மேலும், மனோன்மணி மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார். பயிற்சியின் நிறைவில், கீழ்பவானி முறை நீர்ப்பாசன விவசாயிகள் சபை செயலாளர் பாமா வெங்கடாஜலபதி நன்றியுரை வழங்கினார்.

இப்பயிற்சியை வட்டார தொழில்நுட்ப மேலாளர் கங்கா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஷ்குமார், பூங்கோதை ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்திருந்தனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், அங்கக மற்றும் இயற்கை வேளாண்மையில் உயிர் உரங்கள், இயற்கை உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் மண்புழு உரத்தின் பயன்பாடு குறித்து பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-  IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மதிப்பூட்டப்பட்ட முட்டை உணவுப் பொருட்கள் : தொழில் முனைவோருக்கான புதிய வாய்ப்புகள்



கோழிகளிலிருந்து பெறப்படும் முட்டைகள் நமது உணவில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. உலகிலேயே அதிக முட்டைகள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக நம் நாடு உள்ளது. ஆனால் தனி மனிதனின் முட்டை நுகர்வு நம் நாட்டில் மிகவும் குறைவாகவே உள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைப்படி ஒரு மனிதன் ஆண்டொன்றுக்கு சுமார் 180 முட்டைகள் வரை உட்கொள்ள வேண்டும். ஆனால் நம் நாட்டில் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் சராசரி முட்டைகளின் எண்ணிக்கை சுமார் 42 மட்டுமே. இந்த முட்டை நுகர்வு அதிகரிக்கப்பட வேண்டும். ஏனெனில் முட்டையில் உயர்ந்த புரதச் சத்துடன் பல்வேறு ஊட்டச்சத்துக்களும் நிறைந்துள்ளன. பச்சிளம் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவுப் பொருளாக முட்டை உள்ளது.

முட்டையானது அசைவ உணவு உண்பவர்களால் மற்றும் இன்றி சைவ உணவு உண்பவர்கள் போன்ற அனைத்துத் தரப்பு மக்களாலும் உணவாக உண்ணப்படுகிறது. முட்டைகளை மக்கள் தங்கள் வசதிக்கேற்ப பல்வேறு சுவைகளில் பலதரப்பட்ட முட்டை உணவுப் பொருட்களாகத் தயாரித்து உண்ணுகின்றனர்.



நம் நாட்டில் தற்போது பதப்படுத்தப்பட்ட மற்றும் உடனடி உணவுப் பொருட்களுக்கு வரவேற்பும், தேவையும் அதிகரித்து வருகிறது. நுகர்வோர்களின் தேவைக்கும், சுவைக்கும் ஏற்ப புதிய உணவுப் பொருட்களைத் தயார் செய்து விற்பனை செய்யும் போது மக்களின் தேவையினை நிறைவு செய்ய முடியும்.

முட்டைகளிலிருந்து பல்வேறு பதப்படுத்தப்பட்ட மற்றும் உடனடி உணவுப் பொருட்களை தயார் செய்து விற்பனை செய்ய முடியும். எனவே முட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் பல்வேறு மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்களை நுகர்வோர்களிடையே பிரபலப் படுத்த வேண்டும். முட்டை உணவுப் பொருட்கள் தயாரிப்புத் தொழிலினைக் குறைந்த மூலதனத்தில் எளிதில் கையாளக் கூடிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இலாபகரமாகச் செயல் படுத்தலாம். எனவே படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவி

குழுவினர் போன்றோர் மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் தயாரிப்புத் தொழிலினை மேற்கொள்ள முடியும்.

இதன் மூலம் தனி மனிதனின் முட்டை நுகர்வு உள்நாட்டில் அதிகரிப்பதோடு, உற்பத்தி செய்யப்படும் கோழி முட்டைகளுக்கு உயரிய மதிப்பும், உகந்த விலையும் ஆண்டு முழுவதும் கிடைத்திடும். அத்துடன் முட்டை கோழிப் பண்ணைத் தொழிலும் மென்மேலும் வளமடைந்து வாய்ப்புகள் அதிகரிக்கும்.



### மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள்

முட்டையினை மதிப்பூட்டல் என்பது அவற்றினைப் பயன்படுத்துவோரின் விருப்பத்திற்கேற்ப உடனடியாக உண்ணத் தக்க உணவுப் பொருட்களாகத் தயாரித்து அளிப்பதாகும். மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் என்பது முட்டையின் தன்மை மற்றும் அதனைப் பயன்படுத்துவோருக்கு அளிக்கும் முறையினை மேம்படுத்தி அதன் விலை மதிப்பினை அதிகரிக்க தயாரிக்கப்படும் பொருட்களாகும்.



மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்களை நுகர்வோர்க்கு தேவைப்படும் போதெல்லாம் கிடைக்கச் செய்வதன் மூலம் மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் தயாரிப்புத் தொழில் ஒரு தனித் தொழிலாக வளரும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

முட்டை பஜ்ஜி, முட்டை போண்டா, ஆம்லெட் போன்ற பல்வேறு மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் நம் வீட்டில் அல்லது உணவு விடுதிகளில் தயாரிக்கப்பட்டு உண்ணப்படுகின்றன. இதைத் தவிர பல்வேறு மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்த அல்லது விற்பனை செய்ய முடியும். மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் தயாரிக்க எந்த ஒரு சிறப்பு உபகரணங்களும் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் தயாரிப்பு முறைகள்

#### முட்டை ஊறுகாய்

வேக வைத்த முட்டைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் முட்டை ஊறுகாயினை நீண்ட நாட்கள் வைத்திருந்து பயன்படுத்த முடியும். முட்டைகளை வேக வைத்து ஓட்டினை உரித்து வைத்துக் கொள்ள வேண்டும். வெங்காயம், இஞ்சி மற்றும் பூண்டினை விழுதாக்கி அத்துடன் மஞ்சள் தூள், உப்பு மற்றும் மசாலா தூள் ஆகியவற்றைச் சேர்த்து எண்ணெய் விட்டு நன்கு வதக்க வேண்டும். வதக்கிய

மசாலா கலவையுடன் வினிகர் சேர்த்து ஆற வைத்துக் கொள்ள வேண்டும். ஊறுகாய் திரவம் நன்கு ஆறிய பின்னர் வேக வைத்த முட்டைகளைப் பாட்டில்களில் நிரப்பி அதில் ஊறுகாய் திரவத்தினை நிரப்பி நன்கு குலுக்கி பாட்டில்களை மூடி குளிர்சாதனப் பெட்டியில் சுமார் 8 முதல் 10 நாட்கள் வைத்திருந்து பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் ஊறுகாய் சுவை மற்றும் மணம் ஏற்படும். ஊறுகாய் முட்டை தயாரிப்பதற்கு மிகச் சிறிய கோழி முட்டைகள் அல்லது காடை முட்டைகள் மிகவும் உகந்தது.

**சில்லி முட்டை :** வேக வைத்த முட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் காரமான முட்டை உணவுப் பொருள் சில்லி முட்டையாகும். சில்லி முட்டை தயாரிக்க வேக வைத்த முட்டையினை நான்கு சமமான பகுதிகளாக வெட்டி அத்துடன் பஜ்ஜி மாவு, மிளகாய் தூள், உப்பு, சோள மாவு, மைதா மாவு, ஆகியவற்றை தண்ணீர் சேர்த்து கெட்டியான மசாலா கலவையாக்கி அதில் முக்கி எடுக்க வேண்டும். பின்னர் மசாலா கரைசலில் முக்கி எடுத்த முட்டைத் துண்டுகளை சூடான எண்ணெயில் பொரித்து சுவையான சில்லி முட்டை தயாரிக்கலாம்.

**முட்டை கட்லெட் :** காய்கறி அல்லது இறைச்சி கட்லெட் போன்று சுவையான முட்டை கட்லெட் தயாரிக்கலாம். முட்டையினை உடைத்து ஊற்றி நன்கு கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்து வைத்துக் கொள்ள வேண்டும். வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி முதலியவற்றை விழுதாக்கி கறிவேப்பிலை சேர்த்து எண்ணெய் விட்டு நன்கு வதக்கிக் கொள்ள வேண்டும். வதக்கிய மசாலா கலவையுடன் கலக்கிய முட்டை, மசித்த உருளைக்கிழங்கு மற்றும் மிளகுத்தூள் சேர்த்து நன்கு பிசைந்துக் கொள்ள வேண்டும். பின்னர் விருப்பமான வடிவத்தில் தட்டி அதன் மேல் ரொட்டித்தூள் தூவி எண்ணெயில் வறுத்தோ அல்லது சூடான தோசைக் கல்லில் எண்ணெய் விட்டு வேக வைத்தோ முட்டை கட்லெட் தயாரிக்கலாம்.

**முட்டை உருண்டை :** முட்டை உருண்டை தயாரிக்க முதலில் முட்டையினை உடைத்து ஊற்றி நன்கு கலக்கிக் கொள்ள வேண்டும். இஞ்சி, பூண்டு மற்றும் வெங்காயத்தினை அரைத்து விழுதாக்கிக் கொள்ள வேண்டும். கலக்கிய முட்டையுடன் மைதா மாவு, மசாலாத்தூள், மிளகுத்தூள் மற்றும் இஞ்சி, பூண்டு, வெங்காயம் விழுதினைச் சேர்த்து நன்கு பிசைந்துக் கொள்ள வேண்டும். பின்னர் சிறு சிறு உருண்டைகளாகவோ அல்லது தேவையான வடிவத்தில் ஒன்று அல்லது இரண்டு செ.மீ. கனத்தில் தட்டி வேக வைத்து அல்லது எண்ணெயில் பொரித்து முட்டை உருண்டை அல்லது முட்டை பிட்டு தயாரிக்கலாம்.

**ஸ்காட்ச் முட்டை :** இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மிகவும் பிரபலமான மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருள் ஸ்காட்ச் முட்டை ஆகும். கொத்திறைச்சியுடன் மைதா மாவு, உப்பு, மசாலா தூள், இஞ்சி, பூண்டு, வெங்காயம் விழுது சேர்த்து நன்கு அரைத்து இறைச்சிக் கலவை தயாரித்துக் கொள்ள வேண்டும். அரைத்த இறைச்சிக் கலவையில் வேக வைத்த முட்டைகளை நன்கு முக்கி எடுத்து எண்ணெயில் பொரித்து ஸ்காட்ச் முட்டை தயாரிக்க வேண்டும். ஸ்காட்ச் முட்டை இறைச்சி மற்றும் முட்டை கலந்த சுவையுடன் இருக்கும்.

**முட்டை ஸ்பாஞ்ச் :** முட்டையினை உடைத்து ஊற்றி அதில் நறுக்கிய வெங்காயம், நறுக்கிய பச்சை மிளகாய், பேக்கிங் பவுடர் மற்றும்




உப்பு சேர்த்து நன்கு கலக்க வேண்டும். முட்டைக் கலவையினை இட்லி தயாரிப்பது போன்று இட்லி தட்டுகளில் ஊற்றி இட்லி பாத்திரத்தில் வைத்து மூடி சுமார் 15 முதல் 20 நிமிடம் வரை வேக வைத்து தயாரிக்கப்படும் பொருள் முட்டை ஸ்பாஞ்ச் ஆகும். முட்டை ஸ்பாஞ்ச் மிகவும் மென்மையான பஞ்சு போன்ற சுவையான முட்டை உணவுப் பொருளாகும்.



**முட்டை தொக்கு :** முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் முட்டைத் தொக்கு ஊறுகாய் போன்ற சுவையான முட்டை உணவுப் பொருளாகும். பெரிய வெங்காயத்தினை சிறிது சிறிதாக நறுக்கி எண்ணெய் விட்டு பொன்னிறமாக வதக்கிக் கொள்ள வேண்டும். வதக்கிய வெங்காயத்துடன் பூண்டு, மிளகாய் தூள், மல்லித் தூள் போன்றவற்றை சேர்த்து மீண்டும் நன்கு வதக்கிக் கொள்ள வேண்டும். வதக்கிய மசாலாக் கலவையுடன் நறுக்கிய தக்காளி யினை சேர்த்து மீண்டும் நன்கு வதக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் முட்டையினை உடைத்து ஊற்றி உப்பு கலந்து வதக்கிய மசாலாக் கலவையுடன் சேர்த்து நன்கு கிளறி முட்டை தொக்கு தயாரிக்க வேண்டும். இதைத் தவிர பல்வேறு மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்களைத் தயார் செய்து விற்பனை செய்யலாம்.

பொதுமக்கள் அதிகமாகச் செல்லும் இடங்கள், சுற்றுலா இடங்கள், கல்லூரிகள், இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் நிரந்தரமாக அல்லது பகுதி நேரமாக மதிப்பூட்டிய முட்டை உணவுப் பொருட்கள் விற்பனை நிலையத்தினை துவங்கி முட்டை உணவுப் பொருட்களை தயார் செய்து விற்பனை செய்யலாம்.

சிறிய அளவில் பகுதி நேர தொழிலாக தொடங்கி பின் முழு நேர தொழிலாக நடத்தலாம். பொதுமக்களின் வரவேற்பினை பொறுத்து அதிக முதலீட்டுடன் பெரிய தொழிலாக மாற்றியும் நடத்தலாம். இதன் மூலம் பொதுமக்களுக்கு சத்தான பல்வேறு முட்டை உணவுப் பொருட்கள் எளிதில் கிடைக்கும் நிலை ஏற்படும். இந்த மதிப்பூட்டிய முட்டை உணவு பொருட்கள் தயாரிப்பு தொழில் மூலம் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளும் உருவாகும். மேலும் கோழிப் பண்ணையாளர்கள் உற்பத்தி செய்யும் முட்டைகளுக்கு ஆண்டு முழுவதும் உயரிய மதிப்பும், விலையும் கிடைக்கும். அத்துடன் நம் நாட்டின் முட்டை நுகர்வு எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

தகவல் : ***முனைவர் மூ.சுதா, முனைவர் அ.வானதி, மரு.இராம கிருஷ்ணன்,சி மற்றும் மரு.தேவதர்சினி,சி.மு, கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில் நுட்பத்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி – 625 534.***

# மா மரத்தில் கவாத்து மற்றும் கிளை படர்வு மேலாண்மை




மா மரங்களில் அதிக மகசூல் பெற கவாத்து (PRUNING) செய்தல், மரங்களை சரியான வடிவமைத்தல் போன்ற தொழில்நுட்பங்கள் உதவு கின்றன. இந்த காலகட்டம் தான் அதாவது ஆகஸ்ட் முதல் செப்டெமபர் மாத கால கட்டத்தில் தான் இந்த தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். மா மரத்தில் நாலா பக்கங்களிலும் சூரிய ஒளி படரவும், பூச்சி/ நோய் தாக்குதல் குறையவும் இந்த கவாத்து முறை உதவும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

**மா மரங்களை வடிவமைத்தல்?**

மரம் நடப்பட்ட 3 முதல் 4 ஆண்டுக்குள் மா மரத்திற்கு நல்ல வடிவத்தை அளிக்கும் வகையில் வடிவமைப்பு (DESIGNING), செய்ய வேண்டும். தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரம் வரை பக்கவாட்டு கிளைகள் இல்லாமல் ஒரே தண்டு நேராக வளர வேண்டும். ஒரு மீட்டர் உயரத்திற்கு மேல் மரத்தின் நாலா புறமும் சமமாக பரவும் வகையில் 3 முதல் 4வலிமையான முதன்மை கிளையிலிருந்து வளரும் துணை கிளைகளை மரத்தின் வெளிபுறம் நோக்கி வளர்வதை சீராக்க வேண்டும். மரத்தின் எல்லா பகுதியிலும் சூரிய ஒளிபட்டால் தான் ஒளிசேர்க்கை நடக்கும்.

**மா கவாத்துகள் (PRUNING)**

வளர்ந்த மா மரத்தில், ஆண்டுதோறும் தேவையற்ற, பழுதான கிளைகளை அகற்றி, புதிய தளிர்கள் மற்றும் பூக்கள் அதிகமாக உருவாகும் வகையில், கவாத்து செய்ய வேண்டும். கவாத்து செய்ய இதுவே எற்ற தருணமாகும். மாம்பழங்கள் அறுவடை முடிந்த தருணத்தில் தான் செய்ய வேண்டும். உடைந்த பழுதான நோயுள்ள கொப்புகள் கிளைகளை வெட்டி விடவேண்டும். மரத்தின் அடர்த்தியை குறைக்க வேண்டும்.

மரத்தின் உயரத்தை 7 முதல் 8 அடிக்குள் பராமரிக்க வேண்டும். அறுவடை முடிந்த உடனே பக்க கிளைகள் 50% வரை தேவையற்றதை நீக்க விடவேண்டும். கவாத்து செய்யும் போது பிசிறு இல்லாமல் வெட்டி விட வேண்டும். இதற்கென பிரத்தியேக கத்திகள் உள்ளன.

**கவாத்து செய்த பின் கவனிக்க வேண்டும்?**

கவாத்து செய்த கிளைகள் நோயுள்ள கிளைகள் வெட்டியபின் அதனுடைய வெட்டு காயத்தின் மீது போர்டோ கலவை பேஸ்ட் தடவி விடவேண்டும். (காப்பர் சல்பேட் + சுண்ணாம்பு கலந்த கலவை தான் போர்டோ கலவை). கவாத்து செய்த மா மரத்திற்கு 5 முதல் 10 கிலோ செறிவூட்டப்பட்ட மண்புழு உரம் (ENRICHED FARMYARD MANURE) இடவேண்டும். முறையாக நீர்ப்பாசன வசதி மேற்கொள்ள வேண்டும். அடுத்த அறுவடை பருவத்தில் மகசூல் அதிகரிக்கும்.

என்ன கவாத்து செய்ய நீங்க ரெடியா? தொழில்நுட்பம் தர நான் ரெடி!!

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நானோ விழிப்புணர்வு முகாம்



நாமக்கல், ஆக.26

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் உதவி வேளாண்மை இயக்குநர் (ADA) அலுவலகத்தில் நானோ விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மல்லசமுத்திரம் உதவி வேளாண்மை இயக்குநர் யுவராஜ், சமச்சீர் உரப் பயன்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்கள் குறித்து விளக்கினார். மேலும் இப்கோ கள அதிகாரி அப்துல் ரகுமான், இப்கோ நானோ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, உயிர் உரங்கள் மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்தும் முறை மற்றும் நன்மைகள் குறித்து விளக்க மளித்தார். நானோ உரங்கள் மண்வளத்தை மேம்படுத்துதல், உரப்பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் பயிர் மகசூலை உயர்த்துதல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிப்பதை குறித்து எடுத்துரைத்தார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இயக்குநரின் அறிவுறுத்தலின் பேரில் தாராபுரம் பகுதிகளில் சிறப்பு குழு ஆய்வு



திருப்பூர், ஆக.26

தமிழ்நாட்டின் நெல் விதைகளின் களஞ்சியம் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பகுதி ஆகும். இங்கு 32 தனியார் விதை நெல் உற்பத்தி மற்றும் விற்பனை நிறுவனங்கள், மேலும் 104 அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

தாராபுரம் பகுதியில் நிலவும் தட்பவெப்பநிலை மற்றும் மிதமான காற்று போன்றவை, விதைகள் உரிய ஈரப்பதத்தை அடை வதற்கும், விதைகளை தூற்றுவதற்கும்ஏதுவாக இயற்கை யாகவே அமையப் பெற்றிருக்கிறது. எனவே, மாநிலத்தின் பல்வேறு இடங்களில், நெல் விதைப்பண்ணைகள் பதிவு செய்து, அறுவடை செய்யப்பட்டு, கொண்டு வரப்படும் நெல் விதைகளை தாராபுரம் பகுதியில் உள்ள விதை உற்பத்தி நிறுவனங்களில் உரிய சுத்திகரிப்பு மற்றும் முறையான செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விதை நெல்லாக உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டு தோறும் 75,000 மெ.டன் அளவில் நெல் விதைகள் சுத்திகரிக்கப்பட்டு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களுக்கு பல்வேறு இரக நெல் விதைகள் விதைப்புக்காக அனுப்பப்படுகிறது. இதனால் விவசாயிகளின் விதை தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.


எதிர்வரும் சம்பா பருவ நெல் சாகுபடிக்காக விதை நெல் உற்பத்தி தீவிரமடைந்துள்ள நிலையில் சென்னை விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநரின் அறிவுறுத்தலின் பேரில் சிறப்பு குழு ஆய்வு அமைக்கப்பட்டது. அதன்படி, 24.08.26 அன்று விதை ஆய்வு துணை இயக்குநர், ஈரோடு பெ.சுமதி தலைமையில் விதை ஆய்வு துணை இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் விதை ஆய்வாளர்கள் விழுப்புரம், விருதாச்சலம், கடலூர் மற்றும்

ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குநர் கட்டுப்பாட்டில் பணிபுரியும், தாராபுரம், காங்கேயம், கோபி, சத்தியமங்கலம் மற்றும் பவானி விதை ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்கிய சிறப்பு குழுவினரால் தாராபுரத்தில் உள்ள, 24 விதை உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது விதிமீறல் காணப்பட்ட 15 விதைக்குவியல் களுக்கு விதை விற்பனைத் தடை விதிக்கப்பட்டது. இதன் அளவு 1 90.83 மெ.டன் மற்றும் இதன் மதிப்பு ரூ.78.82 இலட்சம் ஆகும். மேலும் விதிமீறல் காணப்பட்ட 4 விதை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் மீது தற்காலிக விதை விற்பனை உரிமம் முடக்கம் செய்ய பரிந்துரை வழங்கப்பட்டது.

இதுகுறித்து ஈரோடு, விதை ஆய்வுத் துணை இயக்குநர், பெ.சுமதி கூறுகையில் விதை உற்பத்தியாளர்கள் விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதைக்கட்டுப்பாட்டு ஆணை 1983, ஆகியவைகளை பின்பற்றி முறையான விதை உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும், உற்பத்தியாளர்கள் உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்யும் போது உரிய விதை ஆதாரத்திற்கான விபரங்கள், விதை சுத்திகரிப்பு பதிவேடு, உண்மை நிலை அட்டை பொருந்திய விபரப் பதிவேடு மற்றும் இருப்பு பதிவேடு ஆகியவைகள் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளதா என ஆய்வு செய்தார். விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983, ஆகியவற்றை மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.



# அசோலா வளர்ப்போம் – நெல் வயலையும் கால்நடைகளையும் வளப்படுத்துவோம்



அசோலா என்பது நீரில் மிதந்து வளரும் சிறிய வகை நீர்ப்பெரணி ஆகும். இதில் புரதம், தாதுக்கள் மற்றும் வைட்டமின்கள் உள்ளதால், கால்நடைகளுக்கு நல்ல துணைத் தீவனமாகப் பயன்படுத்தப் படுகிறது. குறைந்த செலவில், குறைந்த இடத்தில் வளர்க்க முடிவதால் விவசாயிகளுக்கு இது பயனுள்ளதாக உள்ளது.

### அசோலா வளர்ப்பு

அசோலா வளர்ப்பதற்கு நிழலான மற்றும் சமமான இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். சுமார் 2 X 1 மீட்டர் அளவில் குழி அமைத்து, அதன் அடிப்பகுதியில் பாலித்தீன் தாளை விரிக்க வேண்டும். பின்னர் சிறிதளவு மண் அல்லது மக்கிய தொழு உரத்தைப் பரப்பி, சுமார் 10 – 15 செ.மீ. உயரத்திற்கு தண்ணீர் நிரப்ப வேண்டும். இதில் தேவையான அளவு மாட்டுச்சாணம் மற்றும் ஊட்டச்சத்துகளைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.அதன் பிறகு நல்ல தரமான அசோலா தாய்ப்பொருளைத் தண்ணீரில் பரப்பி விட வேண்டும். முறையான பராமரிப்புடன் சுமார் 7–10 நாட்களில் அசோலா நன்கு வளரத் தொடங்கும். வளர்ந்த அசோலாவை தேவையான அளவு அறுவடை செய்து, சுத்தமான நீரில் கழுவிய பிறகு கால்நடைகளுக்குத் துணைத் தீவனமாக வழங்கலாம்.

### அசோலாவின் பயன்கள்

நெல் வயலில் உயிர் உரமாக பயன்படுகிறது. வளிமண்டல நைட்ரஜனை நிலைநிறுத்தி, மண்ணின் நைட்ரஜன் வளத்தை மேம்படுத்த உதவுகிறது. மண்ணின் கரிமச்சத்தை மேம்படுத்துகிறது. களைகளின் வளர்ச்சியைக் குறைக்க உதவுகிறது. மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாக்க உதவுகிறது. நெல் பயிரின் வளர்ச்சிக்கு உதவுகிறது. புரதம் மற்றும் தாதுக்கள் நிறைந்த சிறந்த துணைத் தீவனம். கால்நடைகளின் வளர்ச்சி மற்றும் பால் உற்பத்திக்கு உதவுகிறது. கால்நடை தீவனச் செலவைக் குறைக்க உதவுகிறது. குறைந்த இடம் மற்றும் குறைந்த செலவில் எளிதாக வளர்க்கலாம். பசு, எருமை, ஆடு, கோழி போன்றவற்றிற்கு துணைத் தீவனமாகப்ப யன்படுத்தலாம்.

### பராமரிப்பில் கவனம்

அசோலா தொட்டியில் உள்ள தண்ணீர் சுத்தமாக இருக்க வேண்டும்.

அதிக வெப்பம் மற்றும் நேரடி சூரிய ஒளி படாமல் நிழல் ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வப்போது தண்ணீரை மாற்றி, தேவையான ஊட்டச்சத்துகளைச் சேர்த்து வந்தால் தொடர்ந்து அசோலாவை உற்பத்தி செய்ய முடியும். அசோலாவை வீட்டின் அருகிலேயே வளர்த்து, கால்நடைகளுக்கான தீவனச் செலவைக் குறைத்து பயன் பெறலாம்.

தகவல் : ***அருந்ததி, ஹஸ்வத்தா பத்மராஜ், கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, மௌனிகா, நான்காம் ஆண்டு மாணவர்கள், வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.***




# விவசாயிகளுக்கு பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் தாவர வழிப்பொருட்களின் பயன்பாடு பற்றிய பயிற்சி

ஈரோடு, ஆக.26

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு பயிர் பல்வகைப் படுத்தல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது.

இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா திட்டம்) மூலம் புத்தூர் புதுபாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிர் பல்வகைப்படுத்தல் பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம், விஞ்ஞானி மா.சிவா, பயிர் பல்வகைப் படுத்தலில் பயிர் சுழற்சி மூலம் மண்வளம் மேம்படும், பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும். இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும். மேலும் பூச்சிமற்றும் நோய்களை கட்டுப்படுத்த தாவர வழிப்பொருட்களை தயார் செய்து பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மண் வளம் காக்கப்படும் என்பதை விளக்கமாக கூறினார். குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் முனைவர் சுரேஷ், பயிர் பல்வகைப் படுத்தலில் பயிர் சுழற்சி செய்வதால் மண்ணின் ஊட்டச்சத்து மீட்டு எடுக்கப்படும்.

மேலும் கலப்பு பயிர்கள், நவதானிய பயிர்களை விதைத்து பயிர் செய்து மடக்கி உழவு செய்வதால் மண்ணின் ஊட்டச்சத்து மீட்டு எடுக்கப்படும்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா பயிறுவகை பயிர்கள் பயிர் செய்து மடக்கி உழவு செய்வதால் மண்ணில் நைட்ரஜன் நிலை நிறுத்தப்படுகிறது. எனவே, உர தேவை குறைகிறது என்பதை தெளிவா களடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன் அவர்கள் அட்மா திட்டங்களின் செயல்பாடுகள், வேளாண் அடுக்குதிட்டத்தின் மூலம் விவசாயிகளின் நில உரிமைகளை ஆதாருடன் இணைக்கும் முறைகள் மற்றும் உழவன் செயலி முலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விதை ஆய்வு குழுவினர் ஆய்வு

புதுக்கோட்டை, ஆக.26

சென்னை, விதைசான்றளிப்பு மற்றும் உயிர்ம சன்றாளிப்பு இயக்குநரின் அறிவுரைப்படி, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சித்ரா தலைமையில், விதை ஆய்வாளர்கள் பாலு, கிரிஜா உள்ளிட்ட குழுவினர் கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை, அன்னவாசல், விராலிமலை பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

நடப்பு சம்பா பருவத்தில், நெல் நாற்றங்கால் மற்றும் நடவு பணிகளில் விவசாயிகள் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர். விதைப்புக்கு தேவையான விதைகள் இருப்பு வைக்கப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்கள் மற்றும் அரசு விரிவாக்க மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விதை சட்டப்படி விதைகள் விற்பனை செய்ய வழங்கப்பட்ட உரிமங்கள், விதை உரிமங்கள் நடப்பில் உள்ள விவரங்கள், சம்பா பருவ விதைகள் இருப்பு, கொள்முதல் செய்யப்பட்ட விதைகளின் இன்வாய்ஸ், முளைப்பு அறிக்கைகள், பதிவு சான்றுகள், விவசாயி களுக்கு வழங்கப்படும் ரசீதுகள் ஆகியவை சரிபார்க்கப்பட்டன. விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்களிடம் மட்டுமே ரசீது பெற்று விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும் என்றும் விதை விற்பனை உரிமம் பெறாமல் விதை விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தனர். தனியார் விதை விற்பனையாளர்கள் ரசீது இல்லாமல் விற்றாலோ, கூடுதல் விலைக்கு விற்பனை செய்தாலோ விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை, 1983 கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தனர். ஆய்வின் போது 11 விதை விற்பனை நிலையங்களில் 4 நெல் விதை அலுவலக மாதிரிகள் முளைப்பு திறன் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டு விதை பரிசோதனை ஆய்வு நிலையத்திற்கு அனுப்பபட்டன. விதை சட்ட விதிகளை மீறிய ரூ.15,47,493 மதிப்புள்ள 31,202.250 கிலோ விதைகளுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது. விதை ஆய்வு துணை இயக்குனர் சுஜாதா, விதை ஆய்வாளர்கள் பாலையன், முனியய்யா ஆகியோர் உடன் இருந்தனர்.

# பயிர் பல்வகைப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி




சிவகங்கை, ஆக.26

சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை வட்டாரம், திருவேலங்குடி கிராமத்தில் ஆத்மா விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 40 விவசாயிகளுக்கு பயிர் பல்வகைப் படுத்துதல் குறித்த பயிற்சி நடைபெற்றது.

சாக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் மங்கையர்கரசி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் சரவணன் முன்னிலை வகித்தார். தலைமை உரையாற்றிய மங்கையர்கரசி சம்பா பருவத்திற்கு ஏற்ற உயர்தர நெல் ரகங்களான CO 52, CO 55, AST -21, RNR 15048 உள்ளிட்ட ரகங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும் விதைகள் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப் படுவது குறித்தும் தெரிவித்தார். துணை வேளாண்மை அலுவலர் சரவணன் உயிர் உரங்களின் பயன்பாடு விதை நேர்த்தி மற்றும் நெல் நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் குறித்து விளக்கினார்.

குன்றக்குடி வேளாண்மை அறிவியல் நிலைய பண்ணை மேலாளர் கமலி பயிர் பல்வகைப்படுத்துதல் தொடர்பான தொழில் நுட்ப உரையாற்றினார். வெவ்வேறு பயிர்களை ஊடுபயிராகவும் வரப்புப் பயிராகவும் பயிர் சுழற்சி முறையிலும் சாகுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் வளத்தைப் பாதுகாத்தல் சாகுபடி செலவைக் குறைத்தல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் குறித்து விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் கணேசன் பயறு வகைகள் தன்னிறைவு இயக்கத்தின் கீழ் உளுந்து விதைகள் மானிய விலையில் வழங்கப்படுவது குறித்து தெரிவித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரசாந்த், சூடோமோனஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி போன்ற உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தங்கபாண்டியன் மற்றும் ரேஷ்மா ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள் பயிர் பல்வகைப்படுத்துதல் மற்றும் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் நடந்தது

மதுரை, ஆக.26

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி தலைமை தாங்கி பேசுகையில் 2026-27 ம் ஆண்டிற்கு வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் முதல் தவணையாக வரப்பெற்ற திட்ட விபரங் களை எடுத்துக் கூறினார். மேலும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையில் மூலமாக செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் தாமரைசெல்வி கலந்து கொண்டு தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தும் மானிய திட்டங்கள் பற்றி விளக்கினார். பட்டுவளர்ச்சி துறையில் இருந்து முத்து முகுந்தன் கலந்து கொண்டு துறை திட்டங்கள் பற்றி விளக்கினார். வேளாண்மை அலுவலர் டார்வின் கலந்து கொண்டு வாடிப்பட்டி வட்டார வேளாண் கிடங்கில் விதைகள், நுண்சத்துக்கள் மற்றும் உயிர் உரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது பற்றி எடுத்துக் கூறினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரியா விவசாயிகளின் தனித்துவ அட்டை எண் பதிவு அதன் முக்கியதுவம் பற்றி விளக்கி வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு பிற விவசாயிகளுக்கு தெரிவித்து பயனைடைய உறுதுணையாக இருக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன் நன்றி கூறினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன் மற்றும் அருணாதேவி ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

# அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நடுதல்

தஞ்சாவூர், ஆக.26

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ஷ்னா ஆகியோர் தங்களது கிராமப்புற வேளாண் அனுபவ



பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம் குறுங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் வளாகத்தில் அமைந்துள்ள மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்று களை நட்டனர். பள்ளி வளாகத்தில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும், மரங்களின் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமையான சூழலை உருவாக்கு வதன் அவசியம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மரக்கன்றுகளுக்கு முறையாக நீர் வழங்குதல், அவற்றைப் பாதுகாத்தல் மற்றும் தொடர்ந்து பராமரித்தல் போன்ற முறைகள் குறித்தும் மாணவிகள் விளக்கினர். இந்நிகழ்வின் மூலம் மாணவர் களிடையே மரங்களைப் பாதுகாப்பது மற்றும் சுற்றுச்சூழல் பொறுப் புணர்வை வளர்ப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# ஆடையூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயப் பயிற்சி முகாம்




சேலம், ஆக.26

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் சார்பில் இயற்கை மற்றும் இயற்கை வழி விவசாயம் தொடர்பான பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமிற்கு ஓய்வு பெற்ற உதவி வேளாண்மை விதை அலுவலர் வி.அர்த்தநாரீஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார்.

அப்போது அவர் பேசுகையில், இரசாயன உரங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் விவசாயத்தைக் காட்டிலும் இயற்கை விவசாயம் எவ்வாறு மண் வளத்தையும், மனித ஆரோக்கியத்தையும் பாதுகாக்கிறது என்பது பற்றி விரிவாக விளக்கினார். மேலும் இரசாயன உரங்களை விட இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள், செலவு

குறைப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களின் தரம் குறித்து விரிவான ஆலோசனைகளையும் மற்றும் இயற்கை முறையில் எவ்வாறு பூச்சிகளை விரட்டுவது குறித்தும் விரிவாக விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

இப்பயிற்சி முகாமில் 40-க்கும் மேற்பட்ட உள்ளூர் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர். கலந்து கொண்ட விவசாயிகள் னைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சி முகாமை அட்மா திட்ட அலுவலர்கள் மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் ஒருங்கிணைத்து மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

